5–5–74	ஸ்ரீ வேத நாராயணசுவாமியின் பிரமமோற்சவவிழா தொடக்கம்
9–5–74	ஸ்ரீ வேதநாராயணசுவாமியின் கருடோற்சவ விழா
13–5–74	ஸ்ரீ வேதநாராயணசுவாமியின் அவபுரோற்சவம்
27–5–74	ஸ்ரீ கோவிந்தராஜசுவாமியின் பிரம்மோற்சவ தொடக்க விழா
31–5–74	ஸ்ரீ கோவிந்தராஜசுவாமியின் கருடோற்சவம்
	திருச்சானூர் ஸ்ரீ பத்மாவதி அம்மையாரின் தெப்போற்சவம்



" திருமலை அந்தாதி "

புலவா. திரு. சீ. கோபாலகிருஷணன (மாயாழவாா), திணடிவனம

★ ★ ★

1 தேனூாதி கருடாழவான திருமேனி மேலமாநதாய !
கானூருமசோலைகமழ காட்சியுடை வேஙகடத்து
மானூர மயிலூர மகிழகுரங்கெ லாமூர
வானூாதி ஏறிவந்து மகிழ்நதிடவே உனைககாணபார்

2 காணபவர்கள் கணகளிகக காட்சிதரும் திருமாலே !
மாணபெலலாம உடையானே ! வரமெல்லாம அருளுதியோ ?
நாணமலரால் வடிவழகை நான்பாாத்து மகிழ்நததுபோல
வேணடிடுவார் கண்மகிழ விழாக்கொள்ள வல்லானே !

3 வல்லதொரு தெயவமென வையத்தே நின்றவனே !
நலலவாகள உள்ளத்தில் நாளும் நிறைந்தவனே !
சொலலறகும எளியவனே ! தூயதிரு வேஙகடவா !
மெல்லநின் திருவடியை என்நெஞசம மேவிடுமோ !

4 மேவிடுவாா நின்மலைக்கண வினைதீாகக வல்லவனே !
கோவிநதா ! கோவிந்தா ! எனககூவி அழைக்கினறேன்
பாவங்கள அகனறிடுமோ ? பன்நீரில் நான்மூழகிச்
சேவிக்க நிற்கினறேன; திருவருளுக கேஙகுகினறேன

5 ஏங்கிடுவார் ஏககமெலாம் தீர்ககின்ற பூஙகுன்று !
பூங்குளதது மூழ்கிடுவாா; புத்தொளியால பொலிந்திடுவார்
தாங்களசெயும் பாவங்கள் தவிாக்கவென வேணடிடுவாா
தீங்கெல்லாம தவிாபபவனே ! திருவருளைப் புரியாயோ ?

6 புரியாத தெய்வமே புண்டரிக மலர்க்கணணு !
தெரியாமல் நானசெய்த தீமைகளைப் பொறுத்திடுவாய !
அரியானே ! என்மட்டில எளியானே ! அன்புடையாய் !
உரிமையினால வேணடுகினறேன் உளம இரங்கி வாராயோ ?

7 வந்தனையேல என்னுள்ளம் வாழ்ததி மகிழநதிடுவேன்,
சிநதனையில் சிந்திப்பேன், திருவுளளம் தெரிநதிடுவேன்;
நொநதவர்கட் குதவிடுவேன்; நேரமாறும நான நடவேன் !
எந்தைநினை அழைகின்றேன் என்னழைப்பை மதிப்பாயோ ?

8 மதிப்புடையேன அருளாலே வாழ்வருளும் பெருமானே !
உதித்து வரும் கதிரவனின் ஒளிதவழும் பொறகோயில்
குதித்தடியார் உளமெல்லாம் கூத்தாடி வலம வரவும
கதிகாட்டும பெருமையினைக காணபவரைக காணுயோ !

9 காணுதார நினமலையை பேரினபம் காணுதார்
மாணுத செயலபுரிநது வருநதிடுவார் மயககததால்
ஏணியென வெளளருவி இழிந்தின்பம் கூடிடவே
காணுகினறேன கணகுளிரக் காட்சிக்கு நல்விருந்தே !

10 விருந்தொன்றும குறையாத மேனியெழில் வேங்கடவா !
அருநதுகின்றேன் நீவழங்கும் ஆரமிழ்தாம பிரசாதம
மருந்தாகி என்வாழவில மாற்றத்தைத் தந்திடுமோ !
கருநதுளப மாலையினுல் கவர்ந்திடுவாய் ! கார்வணணு !



ஓர் விண்ணப்பம்

தி. தி. தேவஸதான "புத்தக வெளியீடு" பிரிவு, 'சப்தகிரி' அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. ஆகவே தி. தி. தேவஸ்தான வெளியீடுகளான நாள காட்டிகள், பஞ்சாங்கங்கள், அஞ்சல பட அட்டைகள், முதலியவை சமபநதமாக கீழ்க்கண்ட விலாசத்துடன் தொடர்பு கொள்ளுமாறு எல்லா பக்தர்களை கேட்டுக்கொள்கிறோம். மேறகண்ட வெளியீடுகளுக்கான பண அனுப்பீடுகள் எல்லாம், கீழ்க் கண்ட முகவரிக்கே அனுப்பவேணடும்.

ஆசிரியர்.

ஆசிரியா,
தி. தி. தேவஸ்தானம,
திருபபதி. (ஆ. பி.)

தைத்திரீய ஆரண்யகம்

॥ तैत्तरीयारण्यकम् ॥

(ஸூர்ய நமஸ்காரம்)

வித்வான் நடாதூர் ஸ்ரீ தேசிகாச்சாரியார்

★ ★ ★

(முன் இதழ் தொடர்ச்சி)

அநுவாகம் — 22

நீரின் மகிமை

१. योऽपां पुष्पं वेद । पुष्पवान् प्रजावान् ।
पशुमान् भवति । चन्द्रमा वा अपः पुष्पम् ।
पुष्पवान् प्रजावान् पशुमान् भवति ।

க யோ அபாம புஷ்பம வேத | புஷபவான பரஜாவான
பசுமான பவதி | சநத்ரமா வா அபாம புஷ்பம|
புஷபவான் பரஜாவான பசுமான பவதி |
ய ஏவம் வேத ||

ய:—எவன், அபாம—நீர்களின், புஷ்பம்—மலரை, வேத—அறிவானோ, அவன, புஷ்பவான்—ஜாதிமல்லிகை சம்பகம் முதலிய மலர்களை உடையவனாகவும், ப்ரஜாவான்—பிள்ளை பெண் முதலிய மக்களை உடையவனாகவும், பசுமான—பசு குதிரை போன்ற நாற்கால் பிராணிகளை உடையவனாகவும், பவதி—ஆகிறான். சந்த்ரமா: சந்திரனே, அபாம—நீர்களின், புஷ்பம் வா—மலர் என்பது பிரசித்தமானது. ய:—எவன், ஏவம் வேத—இப்படி அறிவானோ, புஷ்பவான ப்ரஜாவான் பசுமான் பவதி—மலர்கள், பிராணிகள், மக்கள் இவைகள் நிறைந்தவனாக ஆகிறான, (நீரின் ஏற்றத்தைக் காட்டுவதற்காக இந்த வாக்கியம மறுபடியும் கூறப்பட்டுள்ளது).

சந்திரமண்டலம ஜலமயமாக இருக்கின்றது என்பது முன்னோர்களின் கொள்கை. சந்திரன் ஒரு மலர்ந்த புஷ்பம் போல் பிரகாசித்துக் கொண்டு ஜனங்களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கின்றான். அதனால் சந்திரன ஜலத்தின் மலர் என்று கூறப்படுகிறது. இவ்விதம அறிந்தவன நல்ல மலர்கள் சூட்டப்பட்டு கௌரவிக்கத் தக்கவனாகவும், நல்ல மக்களைப் பெற்றவனாகவும், பசு முதலிய நாற்கால் பிராணிகளை உடைய தனவானாகவும் ஆகிறான். நீரின் மஹிமை இத்தகையது

அக்கினியே நீர்களின ஆதாரம

२. योऽपामायतनं वेद । आयतनवान् भवति ।
अग्निर्वा अपामायतनं । आयतनवान् भवति ॥
योऽग्नेरायतनं वेद । आयतनवान् भवति ।
आपो वा अग्नेरायतनं । आयतनवान् भवति ॥

உ. யோ அபாம ஆயதனம வேத | ஆயதனவான பவதி |
அகனிர்வா அபாம் ஆயதனம| ஆயதனவான் பவதி |
யோ அகனேராயதனம் வேத | ஆயதனவான் பவதி |
ஆபோ வா அகனே: ஆயதனம | ஆயதனவான பவதி ||
ய ஏவம வேத ||

ய:—எவன், அபாம—நீர்களின், ஆயதனம்—ஆதாரத்தை, வேத—அறிவானோ, அவன்,

ஆயதனவான -வீடு உளளவனுக, பவதி— ஆகிறுன். அக்னிா வா—அக்கினியே, அபாம ஆயதனம்—நீாகளின ஆதாரம ஆயதன வான் பவதி—இபபடி அறிநதவன் வீடு உளள வனுக ஆகிருன்.

உபநிஷத்துககளில, உலக ஸருஷ்டியைப பறறிக கூறுமபொழுது, " அகனே ஃ ஆப ஃ" அககினியிலிருநது ஜலம உண்டாயிறறு எனறு கூறப்படடுள்ளது அதஞல் அக்கினியே ஜலத்திற்கு ஆதாரமாகிறது என்று அறிநது கொள்ளவேணடும. " ஆயதன வான் பவதி "—வீடு உள்ளவனுக ஆகிருன் அல்லது இவவுலகததில் எல்லா விஷயங்களிலும் நிலையாக இருக்கும் தன்மையை அடைகிருன என்று பொருள். அக்னி ஜலத்திற்கு ஆதாரமாக இருகிருன் என்று அறிவதில கேட்பவர்களுககு ஒரு ஊக்கத்தை அளிப்பதற்காக " ஆயதனவான் பவதி " எனறு மறுபடியும் கூறபபட்டுள்ளது இம்மாதிரி இந்த இரண்டு சொற்கள் திரும்பவும் கூறப் படும இடஙகளில் இதே கருத்தைக்கொள்ள வேண்டும்.

நீரே அககினியின ஆதாரம

யஃ—எவன், அக்னேஃ—அக்கினியின், ஆயதனம வேத—ஆதாரத்தை அறிவாஞே, ஆயதனவான பவதி—அவன் வீடு உள்ளவனுக ஆகிருன் ஆபோவா—நீர்களே, அக்னே ஃ ஆயதனம—அக்கினியின் ஆதாரம், ய ஏவம் வேத—இவ்விதம் அறிந்தவன் நிலைத்த வீடு செல்வம் புகழ் இவைகளை உடையவனுக ஆகிருன்.

மஹா ஸிருஷ்டி என்கிற ஆதி சிருஷ்டியில் அக்கினியிலிருந்துதான் நீர் உண்டாயிற்று. ஆனுல் அவாந்தர சிருஷ்டி என்கிற பிற்பட்ட சிருஷ்டியில், " ஆபோவா இதம் ஆஸித்ய ஸவம் ஏவ "—எல்லா உலகங்களிலும் ஜலமே நிரம்பியிருந்தது என்று உபநிஷத்து கூறுகினறது ஆகவே இப்பொழுது நாம் காணும் அககினியானது ஜலததிலிருநதே உணடாயிற்று. ஆகவே ஜலமே அககினிககுக காரணம் ஆகிறது எனறு அறிய வேணடும்.

३ योऽपामायतनं वेद । आयतनवान् भवति ।
वायुर्वा अपामायतनम् । आयतनवान् भवति ॥
यो वायोरायतनं वेद । आयतनवान् भवति ।
आपो वै वायोरायतनम् । आयतनवान् भवति ॥
य एवं वेद ॥

௩. யோ அபாம் ஆயதனம் வேத | ஆயதன வான பவதி |
வாயுா வா அபாம ஆயதனம வேத | ஆயதனவான பவதி |
ஆபோ வை வாயோஃ ஆயதனம் | ஆயதனவான பவதி ‖
ய ஏவம வேத ‖

வாயுவே நீாகளின ஆதாரம

வாயுஃ வா—வாயுவே, அபாம்—நீாகளின், ஆயதனம்—ஆதாரம மற்ற சொறகளுககு முன்போல் பொருள் கொள்ளவேணடும்.

மஹா சிருஷ்டியில், " வாயோஃ அக்னிஃ அக்னேஃ ஆபஃ "—காற்றிலிருந்து நெருப்பு பிறந்தது' நெருப்பிலிருந்து நீா பிறநதது, என்று உபநிஷத்தில் கூறப்பட்டுள்ளது. அதஞல் அக்கினியின் மூலமாக வாயும் ஜலத்திற்குக் காரணமாகிறது. காற்று பலமாக வீசுவதஞல்தான் மழையும உணடாகிறது. ஆகவே காற்றே நீர்களுககு ஆதாரம் எனறு கூறப்படுகின்றது.

நீாகளே வாயுவுக்கு ஆதாரம்

ஆபோ வை—நீர்களே. வாயோஃ ஆயதனம்—வாயுவுக்கு ஆதாரம். இவ்விதம் அறிந்தவன் எல்லா விததுதிலும் நிலைத்தலைப் பெறுகிருன்.

முன்பு கூறியபடி, அவாநதர சிருஷ்டியில், ஜலமே அக்னி முதலியவைகளுக்குக் காரண மாக இருப்பதால வாயுவுக்கும் ஆதாரமாக உள்ளது என்று அறியவேண்டும்.

(தொடரும்)

சங்கீத ரத்தினம் தாள்ளபாக்கம்

அண்ணமாச்சாரியார்

திரு R பத்மநாபன், B A, B T, வேலூர்–12.

'இசைவாணர்களும், புலவர்களும் அவதரிப்பவர்கள், அவர்கள் ஆக்கப்படுவதில்லை' என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. அறிவுலக மேதைகள் ஒவ்வொரு காலத்திலும், ஒவ்வொரு இடத்திலும் தோன்றி தங்களுடைய அருமையான கீர்த்தனைகளையும், கவிதைகளையும் பொழிகிறுர்கள். மனித சமுதாயத்தைப் பற்றியும், இவ்வுலகத்தைப் படைத்த இறைவனைப்பற்றியும் அம்மேதைகள் பாமாலைகளால் புனைந்திருக்கிறாகள அவர்களுடைய கற்பனையில புதுப்புது ராகங்களும், பாடல்களும் உருவெடுத்து அயராமல் பொங்கிக் கொணடிருந்தன. கேட்டப் பொழுதில் அவாகளுடைய கீாத்தனைகள மெய்சிலிாக்கச் செய்யும் அமைபபைக் கொணடவை. கர்நாடக சங்கீத பிதாமகர் என்று இசையுலகம் போற்றும புரந்தரதாசருக்கு முன் வாழ்நதவர் அநத இசை மேதை; பகதிமான். அவர்தான் தாள்ளபாக்க அணணமாச்சாரியார் என்பவராவர்.

அண்ணமாச்சாரியார் கி. பி. 1424-ஆம் ஆணடு ஏப்ரல் மாதம் ஆந்திர மாநிலத்தில கல்வியறிவும் பண்புமமிகக ஒரு ஸ்ரீ வைஷ்ணவ குடும்பத்தில் அவதரித்தார். சிறு வயது தொட்டு ஞானத்தையும், கடவுள் பக்தியையும் பெற்ற அண்ணமாச்சாரியார் எல்லாத் திருக்கோயில்களுக்கும் தலைசிறந்ததாகத் திகழும திருமலைக்கு பத்தாண்டு முடிவதற்குள் வந்து சேர்ந்ததாகத் தெரிகிறது. மற்ற சங்கீத மேதைகளைப்போல அவரும் ஸ்ரீவேங்கடேசனைத்தரிசிததுப் பிரபநதங்கள் பாடினுர். அவருடைய பாடல்களைக் கேட்க பக்தர்கள நாற்றிசையிலிருநது வநது கூடினுர்கள். அவர் திவ்விய நாம கீாத்தனைகளையும், உற்சவ சம்பிரதாய கீாத்தனைகளையும் இயற்றினுர்.

இசை மேதையாகவும், ஸ்ரீவேங்கடேசுவரரின ஓா ஒப்பற்ற பகதனுகவும் விளங்கிய அண்ணமாச்சாரியார் தமது பதினுறும் வயதில் திருமணம் செயது கொண்டதாகத் தெரிகிறது சில நாட்களுக்குப பின்னர் மற்ருெரு மங்கையையும் மணநதுகொணடார், எனவே அவா தமது இரணடு மனைவிகளுடன் இல்லறம் நடத்தினுா.

நாடகள செல்லச செல்ல அணணமாசசாரியார் ஆத்மீக, நீதிக கருததுககளைக் கொணட கீர்ததனைகளைப பாடும் மகானுகத் திகழ்ந்தார். அவருக்கு முன் அவரது தநதை திருமலாச்சாரியார் திருமலையில் விடியற் காலையில பாடப்படும் ஸுப்ரபாதத்தைக் கீாத்தனைகளாக எழுதி அவறறைப் பாடுவதில் புகழ் பெற்ருர். அககீர்த்தனைகள் இன்றும் கர்நாடக சஙகீததின் ஜீவநாடியாக விளங்குகின்றன. திருமலையின் திருக்கூடங்களில் அவை இன்றும் எதிரொலிப்பதைக் கணடு களிக்கலாம்.

தாள்ளப்பாகக குடும்பத்தில் இரத்தினமாகத் திகழ்நத அணணமாசசாரியார், நாட்கள் செல்லச செலல ஞான, தர்ம, பகதி உணாசசிகளிலும, பிரசாரத்திலும ஓர் ஒப்பறற ஞான குருவாக விளஙகலானுர். ஸ்ரீ சமாத்த இராமதாஸா இராமபக்தியில மூழ்கிக் கிடந்ததுபோல், அண்ணமாசசாரியாரும் எலலோரையும் தட்டியெழுப்பும் சக்தி

மிக்க ஸ்ரீவேங்கடேசுவர மகாத்மியத்தில் முழு மூசசுடன் ஈடுபட்டு, திருமலையில் அன் றுடம திருததொணடு செயது வநதார். சிறநத வைணவ பக்தரும, வேதாந்தியு மான அண்ணமாச்சாரியாா ஸ்ரீவேஙகடேசு வரரின் திருவடிகளில் பலலாணடு தொணடு செய்து, விருததியாப்பிய தசையில் இறை வன் திருவடியை அடைந்தார்.

மகான் அண்ணமாச்சாரியாரின் பக்தி அநுபவங்களை மிக்க சங்கீர்த்தனைகளையும், பக்திப் பூங்காக்களையும் படைத்திருக்கிறார். அவற்றில் குறிப்பிடத்தக்கவை வேங்கடாத்ரி மகாத்மியம், யோக மாாக்க வைராக்கியம், சிருங்கார ரசனை முதலியவை. பக்திச் சுவை சொட்டும் பன்னிரண்டு பிரபந்தங்களையும், சதகம் பன்னிரண்டையும் அம்மகான் பாடி யருளினர். மேலும் தெலுங்கு மொழியில் அவா பாடிய கீர்த்தனைகள் பலவாம். அவை தற்காலத்தில் இசைமேடைகளிலும், வானொலியிலும் பண்பட்ட அழகுடன் மேலும மேலும் எதிரொலிக்கின்றன.

தாள்ளப்பாக்க அணணமாச்சாரியார் மறைந்த பின்னரும் அவரைப் போல் பண்பும் ஆற்றலும் மிக்க அவரது சந்ததிமார்கள் திருமலையில் தொடர்ந்து தொணடு செய்து வந்தார்கள். அச்சநததியார்களுள் குறிப் பிடத் தக்கவர் தாள்ளப்பாக்க சின்னையா என்பவராவர். பஜனை பததிகளில் சின்னையயா மூலபுருஷராகக் கருதப்படுகிறார். பள்ளியறை சேவையில் தாள்ளப்பாக்கப் பண்கள் இன்றும் திருமலையில் பாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. சின்னையாவின் கீர்த்தனைகளில் ஒன்று, சங்கராப்ரண ராகத்தில் இனறும் அழகுடன் பாடப்பட்டு வருகிறது.

இசையிலும், பக்தியிலும் அவ்வப் போதிருந்த மனநிலைக்கும் உணர்ச்சிக்கும் தக்கவாறு ஏற்றராகமும், மெட்டும் அமைந் திருபபது இசையிலும பகதியிலும் அம் மகான மெய்மறநது தன்னையே இழந்து நின்றதற்குச் சானருகும் அவருககுப் பிறகு தூர தூர தேசங்களிலிருநது ரசிர்களும் சீடர்களும் வந்து கொணடிருந்தாாகள். அவர் புகழ் ஆந்திர நாடு முழுவதும் காட்டுத் தீ போல் பரவிற்று.

அணணமாச்சாரியார் கீர்த்தனைகளும் பாமாலைகளும் எந்த வழியிலுமம தமிழில் நாயன்மார்கள் ஆழ்வார்கள் இயற்றிய இலக்கியத்திற்கும், புரந்தரதாசர் இயற்றிய கன்னட இலக்கியத்திற்கும், துளசிதாஸர், மற்றும் சூர்யதாஸ் இந்தியில் இயற்றிய இலக்கியற்திற்கும் குறைந்ததல்ல என்று துணிந்து கூறலாம்

மகான் அண்ணமாச்சாரியாரின் வருட ஆராதனை முதன் முதலில் 1949-ஆம் ஆணடு ஆரம்பிககப்பட்டு தொடாந்து திருமலை திருப்பதி தேவஸ்தானத்தாரால் கொண்டாடப்படுகின்றது. 24-ஆம் வருட ஆராதனை உற்சவம் 3 நாட்கள் (12-3-72 முதல் 14-3-72 வரை) வெகு சிறப்பாக நடைபெற்றது. தெலுங்கு இலககியத்திற்கு அம்மகான் செய்த தொண்டு தற்காலத்தில் பாராட்டப்படுகின்றது.

முடிவுரை:-

இசையுலகக் காவலனய், பக்திக் கருவூல மாய், தாய்மொழியான தெலுங்கு மொழி பற்றுமிக்க பெரும்புலவரான தாள்ளப் பாக்க அண்ணமாச்சாரியார் மறைந்து ஐந்து நூற்றுண்டுகள் கழிந்து விட்டன. அம் மகான் மறைந்தாலும் அவர் புகழுட லாகிய கீர்த்தனைகளும், படைப்புகளும் நம்மை விட்டு என்றும் மறையாது நிற்கும் என்பது உறுதி. அவருடைய இசைக் கருவூலத்தைப் போற்றி நுகர்வோமாக!

வளர்க அண்ணமாச்சாரியாரின் புகழ்! சர்வலோக நிவாஸாய ஸ்ரீநிவாசாய மங்களம்!

ஹனுமத் ப்ரபாவம்

திரு முருகனடி சேலம். எஸ் ஜெயராமன, சேலம்—1

முனனுரை · ஹனுமான என்ருல் புஜபல பராகரமத்தோடு கூடியவர் என்று பொருள. ஹனுமான எனருல முகமுகததோடுககூடி விளங்குபவா எனறு பொருள். ஹனுமான என்ற பதம் சிரஞ்ஜீவத்வத்தைக் குறிக்கும என்பது சிரத்தையுள்ளவர்களின் நம்பிக்கை பக்திககோர் ஹனுமாா; அவரே "ஆத்மசகதியும், ஆற்றலும பொருநதிய மஹான" என்ற விவேகானநதர் புகழுரை இதற்கு மேலும அணி செய்கிறது இப்படி விளங்கும் ஹனுமத மஹாத்மியம் தெயவப் பண்பு கொண டோர்க்கே கைகூடும். இத்தனே சிறப்புகளைக் கொண்ட ஹனுமார் பற்றிய இரண டொரு வரலாற்றுக் குறிப்புககளை இங்கே சிறிது உணாவோமாக. இதிகாசங்களிலும இவருடைய ஏற்றம சொல்லி யிருக்கிறது.

ஆணடவன் பிறப்பற்றவன் என்ருலும அடியார்களுக்காகப் பல பிறப்புகளை உடையவன் என்பதை தசாவதாரம் நமக்குக் காட்டு கிறது; இநத தசாவதாரத்தில இராமாவதாரம 7வது அவதாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இங்ஙனமான இராமாவதாரக காலத்திலே, இராமனிடத்திலே பக்தி செய்து, அருள் பெற்ற அடியார்களிலே முதன்மையானவரெனக கருதப்படுபவர் நமது ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமியே என்பது பிரத்யட்க்ஷம. சிரஞ்ஜீவிகள் எழுவரில ஏற்றமுடையவர் ஹனுமாரே.

வரலாறு. வாயுதேவனது அருளால் அஞ்சனே வயிற்றில் பிறந்து இந்திரனல் அருளிச் செய்யப்பட்ட ஐந்திர வியாக்கிரணத்தை ஆறு நாட்கள் ஓதியுணர்ந்து, இராவண யுத்ததத்தில் இராமருககுப பற்பல உதவிகள் புரிநத பெருவலிமையுடையவர் அநுமாா இராம நாமம சொல்வதிலே பெரும்பகதி கொணடவர் உள்ளக கோயில் காட்டியவர் குழநதை பருவததே சூரியனே கனியெனப் பறிககச்சென்றவர். பகைவர் பால தூது செல்ல அனுமனேப் போன்ற ஆற்றல படைத்த வீரர் வேறு ஒருவருமிலலே என ஹனுமத ப்ரபாவம், ராமபிரானல் அங்கதன் தூது படலததில் பேசப்படுகிறது.

படைப்பில் குரங்கானுலும், அனுமானேப் போனற புத்திசாலிக் குரங்கைக் காண்ப தரிது. அவன் வானர அரசனன சுக்ரீவனுக்கு சேனதிபதியாக இருந்தான். இராவணன் சீதையைத தூககிக்கொணடு போன போது அச்சீதையைத் தேடிக் கண்டுப்பிடிப்பதிலே இராமருக்குப் பேருதவியாய் இருந்தவன இவ்வனுமானேயாகும். அவனுக்குப் பல யுக்திகள் உணடு. மலே போலவும், கைவிரல் போலவும் ஆககககூடிய சக்தி அவனுக்கிருநதது

ஹனுமான் தோற்றத்திலே அவலக்ஷணமாக இருந்தாலும் அவனது இதயம் பரிசுத்தமானது. அழகிய இலங்கா நகரை அக்கினிககே இறையாக்கி விட்டவன் இவ்வனுமான்தான். இறைவனுடைய நாமத்தை ஓதவும் பாடவுமே அனுமான அவதரித்தான் எனலாம். அவ்வளவு ஞானமும் பக்தியும் அவனுக்கு இராமனிடத்திலே. இராமபக்த ஹனுமானிடத்திலே பகதி வைப்பவர்கள் வைராக்ய ஞானததோடு கூடி சங்கீத ஞானமும் அடையப் பெறுவா என்பதாக கற்றறிந்தோர் கூறும் கருத்து

வைணவச் சிறப்பு அம்சங்களில் அனுமார்: ஹரிகதா மற்றும் பஜனைகளில் ஆஞ்சநேயருக்கு முதல் வணக்கம் என்பதைப் பார்க்கிறோம். காரணம் "ஸம்ப்ரதாயப் பிரவர்த்தகர்" என்று போற்றப்படுவதுதான். திருவடி என்பது கம்பன் காட்டிய கம்பராமாயணக் குறிப்பு மட்டுமல்ல, ஸ்ரீவைஷ்ணவர்கள் அத்தகைய பெயர் வைத்து அழைப்பதும் வழக்கமாக உள்ளது. ஹனுமாருடைய வழிபாடு விஷ்ணு ஆலயங்களிலே மிகவும் வைபவத்துடன் நடக்கிறது. சில வீடுகளில் சிறிய வடிவத்தில் வைத்துப் பூஜிப்பார்கள்.

ஸ்ரீ தேசிகன் முதலான கவிகளும், ஹனுமாருக்கு ஸர்வஸ்நானம் கொடுத்து இருக்கிறார்கள் என்பதை அவன் மஹிமையில் நம்பிக்கைக் கொண்டோர் அறிவர். இப்படி வெற்றித் தெய்வமாக எங்கும் அர்ச்சிக்கப்படுபவர் ஹனுமார் என்ற விபரமறிய வேண்டியது.

முடிவுரை: ஹனுமார் ஸ்தோத்ரப்பிரியர். கேட்டமாத்திரத்தில் சந்தோஷப்படுகிறவர். தயிருஞ்சாதம் வடைமாலையோடு கூடி நிவேதிப்பவர்களுக்கு நினைத்ததை முடித்து தருபவர்.

ஹனுமாரின் ஸேவை நம் தேவைகளைப் பூர்த்தி செய்யும் என்பதில் சந்தேகமேயில்லை. புராணப் பிரவச்சனங்களிலே இவருக்கு ஆசனமிட்டு கௌரவிப்பர். இவர்கதையைக் கேட்பவர்கள் அசாத்ய தைரியத்தோடு கூடி மஹாபல புருஷர்களாக விளங்குவார்கள்.

திருப்பதியில் ஹனுமார்: ஒருசமயம் உதய சூரியனை சிவந்த பழம் என எண்ணி ஆஞ்சநேய சிசு அதனைப் பறிக்கச் சென்றார். இதனைக்கண்ட ராகு கோபங்கொண்டார். இந்தச் செய்தியை இந்திரனிடம் ஓடோடிச் சென்று தெரிவித்தார். இந்திரன் ஆஞ்சநேயரின் கனனத்தில் தனது வஜ்ராயுதத்தால் நைய்யப்புடைத்தான். அடிப்பட்ட தெய்வக் குழந்தை ஆகாயத்திலிருந்து ஒரு மலைமீது விழுந்தது. இந்த இடம்தான் திருப்பதி மலைகளில் ஒன்று என்பது சிலர் கருத்தாம்.

ஸ்தோத்ரப் பலன்:

ஹனுமான் அஞ்ஜனாஸூனுர் வாயுபுத்ரோ மஹாபல: !
ராமேஷ்ட: பல்குனஸக: பிங்காக்ஷோ(அ)மித விக்ரம: !!
உததிக்ரமணஸ்சைவ ஸீதா ஸோக விநாசன:
லக்ஷ்மண ப்ராண தாதா ச தசக்ரீவ ஸதர்ப்பஹா:

(ஆனந்த ராமாயணச்லோகம்)

எவனொருவன் பக்தியுடன் மேலே குறிப்பிட்ட ச்லோகத்தைப் பாராயணஞ் செய்கிறானோ அவன், பாம்பு பழையத் தோலினின்றும் விடுபட்டாற்போல பாவங்கள் பலவற்றினின்றும் விடுபடுவான் என்பதாம். மேலும்இவர் வாயு குமாரர் ஆனதால் வாயு பாதை நீங்கப்பெறுவர். கம்ப ராமாயணத் திற்கொரு ஸோபை என்றால் அது சுந்தர காண்டத்தினால்தான் என்று சொல்லலாம். ஆஞ்சநேய உற்சவமின்றி எந்த பந்த்ததியும் பூர்த்தியாவதில்லை. அப்பேர்ப்பட்ட தாஸ்யை கைங்கர்யம் ஒன்றினையே தரவேண்டுமென அவ்விறைவனை பிரார்த்திப்போமாக! அதுவே ப்ராப்தம் எனக்கொள்வோமாக. இவரது பெருமையை நினைந்து உருகி சனிக்கிழமை தோறும் இவரிடம் வேண்டிக் கொண்டால் சனிப்ரீதி ஏற்படும். ஆஞ்சநேயஸ்வாமிக்குத் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, வெளித்தேசத்திலும் கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளன. யாவரும் வணங்கத்தக்கவாறு அரசமரத்தடி, படித்துறை, சந்நிதிகளில் கூட இவர் திருவுருவம் அமைந்திருப்பதைச் சாதாரணமாகக் காணலாம். இப்படிப் பிரசித்திப் பெற்ற ஸ்ரீ ஆஞ்சநேயரை நாம் அனைவரும் சென்று அருள்பாடி தரிசனம் செய்து, எண்ணிய பலனும், புண்ணிய பலமும் பெற வேண்டும் என்பதாக அவர் திருவடிக்கு வணக்கஞ் செலுத்தி இதனை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

ஜெய வீர ஆஞ்சநேய ஸ்வாமியே சரணம்!

முக்கவி கண்ட காப்பியம்

திரு. T G. அனந்த சுபரமண்யம், திருபபதி.

(காபேயன்)

"ஆரண்ய காண்டம்"

—⁂○⁂—

(முன இதழின தொடாசசி)

வால்மீகத்திலும் மற்ற இராமாயணங்களிலும் நகிலே அறுத்ததாகக கூறவில்லே. ஆனல் கம்பர் எழுதியதற்கு ஆதாரம பாரதத்திலும் ஸ்காந்தத்திலும் கூறப்படுவேதயாகும்.

பாரதத்தில் காது, மூக்கு, உதடு என்று கூறப்பட்டுள்ளது

"निकृत्तकर्णनासौष्ठां चकार रघुनन्दन:"

ஸ்காந்தத்தில் காதுகள்; நகில்கள், மூக்கு இவைகளே இராமனின் உத்தரவினல் லக்ஷ்மணன் கொய்தான் என்று காணப்படுகிறது

"लक्ष्मणस्तूर्णमुत्थाय करवालेन वीर्यवान् ।
कर्णौ स्तनौ नासिकां च आच्छिनद्रामशासनात्॥"

எல்லா இராமாயணத்திலும் இராமனின உத்தரவினல தான் சூாபணகையைப் பங்கப் படுத்தியதாகக காணப்படுகிறது. கம்பராமாயணத்திலோ அவ்விதமிலலே.

இவ்விதம் பங்கமடைந்த சூர்பணகை கரன் என்ற தன் சகோதரனே அடைநதாள.

கரனுக்கும் சூாபணகைக்கும் உளள உறவு. கரன் இராவணனுக்குத் தம்பி முறையாவான். பிரம்மாவினுடைய புத்ரன் புலஸ்த்யர். புலஸதயருடைய புத்ரன் விச்ரவஸு. விச்ரவசுவிற்கு இரண்டு மனேவியர். இருவரும் சகோதரிகள். ஒருததியின் பெயர் கேகசி. மற்றெருத்தியின் பெயர் கும்பீனசி இராவணன், கும்பகர்ணன், சூாப்பணகை, விபீஷணன் எனபவர்கள விச்ரவசுவிற்கும கேகசியிக்கும் பிறந்தவர்கள். கரன், தூஷணன் என்பவர்கள விசரவசுவிற்கும் கும்பீனசிக்கும பிறந்தவர்கள். திசிரஸ் என்பவன் கரனுடைய சேனேக்குத் தலேவன். காலகேயரோடு இராவணன் போர் செயயும்பொழுது சூர்பபணகையின் கணவன் இராவணனல் கொல்லபபட்டான். கணவனே இழநத சூாப்பணகையின் மனம் கோணுமல இருப்பதற்கும், வாழவும, மகிழ்ச்சியடையவும் தணடகாரண்யம் என்ற பெரும் காட்டில் ஜனஸ்தானம் என்ற நகரத்தை உண்டாக்கி அங்கே அவளே வசிக்கச் செய்தான். அவளுக்கு உதவியாகக் கரன், தூஷணன் இருவரையும் அங்கேயே இருக்கச் செய்தான்.

கரனுடைய படைகள் அறுபது லக்ஷம. இவர்கள் எல்லோரையும் போரில் கொன்றுவிட்டான் இராமன். இந்நிகழ்ச்சிகள் வால்மீகியைப் போல் எல்லா இராமாயணங்களும் கூறுகின்றன. கரனுக்கும் இராமனுக்கும் வாக்குவாதம் நடைபெற்று கரனேயும நாசம் செய்துவிடுகிருன் இராமன். வால்மீகி 12 சர்கங்களால் கர - தூஷண யுத்தத்தை வர்ணிக்கிருர். ஏனெனில் அவ்வளவு பலம் பொருந்தியவர்கள் அவர்கள் கரனின் வதத்தைக் கூறும் சர்கம் ஆரண்ய காணடத்தில் 30-வது சர்கமாகும். இந்த சர்கத்திற்குப் பலன் ஸ்காந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது.

"श्रुत्वा श्रीरामविजयं पापबन्धात्प्रमुच्यते ।
तथैव शृङ्खलाबन्धादृणबन्धाद्विमुच्यते ॥
श्रुत्वा पुष्पवती नारी तनयं वंशवर्धनम् ।
लभते राघवेन्द्रस्य प्रसादात्कीर्तिवर्धनम् ॥"

அதாவது இநத வால்மீகி இராமாயண ஆரணய காணடத்திலுளள 30-வது சாகத்தைப்பாராயணம செயதால அவன பாபத்திலிருந்து விடுபடுவான் ருதுஸ்நான செய்யும யுவதீ வமச விருத்தியைக் கொடுக்கும பிள்ளையைப பெறுவாள் மேலும் இராமனுடைய அனுக்ரஹத்தால் கீர்த்தியும், ச்ரேயஸ்ஸையும் அடைவான் என்று கூறப் பட்டுள்ளது

இவவிதம கரன், தூஷணன், திரிசிரஸ இம்மூன்று பேரும், அறுபது லட்ச படையும் அரக்கர்களும் மாண்டதைக கண்ட சூர்ப்பணகை பயந்து இராவணனிடம் சொல்ல ஓடிஞள்.

சூர்ப்பணகை இராவணனிடம் சென்று சொல்லுவதற்கு முன் இராவணனின ஒற்றனை அகம்பனன் என்பவன் முதலில் இராவணனிடம இவ்விஷயததைக கூறச் சென்ருன். அவன் சொல்லும் பொழுதே இராவணனுக குக் கோபம் உணடாயிறறு.

"जनस्थानस्थिता राजन् राक्षसा बहवो हता:"

''அரசே! ஜனஸ்தானத்திலுள்ள அநேக இராக்ஷஸர்கள் கொல்லப்பட்டார்கள் (அதாவது இலங்கைக்கு ஜனஸ்தானம் வாசற்படி போலுள்ளது).

"खरश्च निहत: सङ्ख्ये कथञ्चिदहमागत:"

கரனும் கொலலப்படடான. நாஞே சிரமப்பட்டு இங்கு ஓடிவந்தேன்'' எனருன். இராவணன் ''யாரடா! அவன் ஜனஸ்தானத்தைச சூன்யமாகச் செய்தவன்! நான் காலனுக்குக காலன். இப்பொழுதே வாயுவேகமாகச் சென்று அவனைக் கொன்று வருகிறேன்'' எனறு கூறியதைக் கேட்ட அகம்பனன் இராவணனிடம் அபயததைப பிராாததித்துக கூறுகிருன்.

"पुत्रो दशरथस्यास्ति सिंहसंहननो युवा ।
रामो नाम वृषस्कन्धो वृत्तायतमहाभुज: ॥"

எடுத்த எடுபபிலேயே தசரதனின மகன் சிங்கம் போன்றவன என்று வால்மீகி கூறுகிருர். "सिहसंहनन" எனற பதத்தைப் போட்டு இராமனை அதற்கு மேல் உயர்த்தத் தெரியாது விட்டுவிட்டார் வால்மீகி. "सिंहसनन" என்ற பதத்திற்குப் பொருள அமரகோசம் கூறுகிறது. ("वराङ्गरूपोपेतो य सहसहननो हि स:" என்று) இராமன நலல வாலிபப்பருவமுடையவன். கரன் தூஷணன் முதலானவர்களை அழித்தவனென்றும, எங்கெங்கே அரக்கர்கள் ஓடுகிருர்களோ அங்கெங்கெல்லாம இராமன உருவத்தையே காண்கிருர்கள். அத்தகைய பலம், பெருமை பொருநதியவன் என்று கூற, இராவணன் ''இப்பொழுதே அவனை அழித்து விடுகிறேன'' என்று சொல்லிப்புறப்பட ஆரம்பித்தான. இவ்வாாததையைக் கேடட அகம்பனன், இராவணனைப் பார்த்து ''இராவண! உன் ஆர்ப்பாட்டத்திற்கு அவன பயபபடமாட்டான் யுததத்தில் அவனை ஜெயிகக முடியாது.

"न हि रामो दशग्रीव शक्यो जेतुं त्वया युधि ।
न तं वध्यमहं मन्ये सर्वैर्देवासुरैरपि ।
अय तस्य वधोपाय तं ममैकमना: शृणु ॥"

நான் ஒரு உபாயம சொலலுகிறேன். அதனபடி செய்'' என்று கூறி, ஸீதையைப் பற்றியும், அவள் அழகைப்பற்றியும் கூறிஞன்.

பிறகு" நீ அவளைத் தூக்கிக் கொண்டு வந்து விடு. இராமன் சீதையில்லாமையால் உயிர் விட்டு விடுவான்" என்று கூறுகிறான்.

"तस्यापहर भार्यां त्वं प्रमथ्य तु महावने ।
सीताया रहितः कामी रामो हास्यति जीवितम् ॥

இந்த வார்த்தையைக் கேட்ட இராவணன் ஸீதையைக் கொண்டு வருவதற்குப் புறப்பட்டான். இங்கு ஒரு விபரம் கூறவேண்டியுள்ளது. அதாவது அகம்பனன் "ஸீதையைக் கொண்டு வந்து விட்டால் இராமன் ஸீதையில்லாமல் இறந்துவிடுவான்" என்று கூறுகிறான். இதைக் கேட்டவுடனேயே முன் பின் யோசியாமல் இராவணன் புறப்பட்டானல்லவா? இதற்கு காரணம் உத்தர இராமாயணத்தில் இருக்கிறது.

"अथापरां कथां दिव्यां शृणु राजन् पुरातनीम् ।
यदर्थं राम वैदेही रावणेन हृता पुरा ॥
पुरा कृतयुगे राम प्रजापतिसुतं प्रभुम् ।
सनत्कुमारमासीनं रावणो वाक्यमब्रवीत् ॥

रावणः—

दैत्यदानवयक्षांसि ये हतास्समरेऽरयः ।
कां गतिं प्रतिपद्यन्ते केन ते हरिणा हताः ॥

सनत्कुमारः—

ये ये हताश्चक्रधरेण राजन् त्रैलोक्यनाथेन जनार्दनेन ।
ते ते गतास्तन्निलयं नरेन्द्राः क्रोधोऽपि देवस्य वरेण तुल्यः ॥

श्रुत्वा ततस्तद्वचनं निशाचरस्सनत्कुमारस्यमुखाद्विनिर्गतम् ।
तदा प्रहृष्टस्स बभूव विस्मितः कथं नु यास्यामि हरिंमहाहवे ॥

मुनिः—

इक्ष्वाकूणां च यो राजा भाव्यो दशरथो भुवि ।
तस्य सूनुर्महातेजाः रामो नाम भविष्यति ॥
एवं श्रुत्वा महाबाहू राक्षसेन्द्रः प्रतापवान् ।
त्वया सह विरोधेच्छश्चिन्तयामास राघव ॥
सनत्कुमारात्तद्वाक्यं चिन्तमानो मुहुर्मुहुः ।
रावणो मुमुदे मोहाद्युद्धार्थी विचचार ह ॥
एतदर्थं महाबाहो रावणेन दुरात्मना ।
सुता जनकराजस्य हृता राम महामते ।
लङ्कामानीय यत्नेन मातेव परिरक्षिता ॥

அகஸ்தியர் ராமனுக்கு க்ருத யுகத்தில் சீதையை எடுத்துக்கொண்டு போவதற்குக் காரணம் என்னவென்று கூறுகிறார். அதாவது ராவணன் ஸநத் குமாரரைப் பார்த்துக் கேட்கிறார் "எப்படி எல்லா அசுரர்கள் நாராயணனால் கொல்லப்பட்டு ஸ்ரீ நாராயணனின் பாதாரவிந்தங்களை அடைகிறார்களோ அதேபோல் நானும் அடைய விரும்புகிறேன்" என்றார். அதற்கு முனிவர் "ராவண! த்ரேதா யுகம் ஆரம்பத்தில் தசரதன் என்ற அரசனுக்கு ராமன் பிறக்கப்போகிறான். அவனுடைய மனைவியை அபஹரித்தால் அவனால் கொல்லப்பட்டு அவன் பாதங்களை அடையலாம்" என்றார். அதைக்கேட்ட ராவணன் சீதையை அபஹரித்து இலங்கையில் தாயைப் போல காப்பாற்றினான் என்று கூறுகிறார். ஆகையால் ராவணனுக்கு அவ்வெண்ணம் ஏற்பட்டது.

ராவணன் தேரை ஓட்டிக்கொண்டு நேராக மாரீசன் இருந்த ஆச்ரமத்தை அடைந்தான். மாரீசன் ராவணனை உபசரித்து "தாங்கள் வந்த காரியம் என்ன?" என்று கேட்கிறான். அதற்கு ராவணன் "மாரீச! என்னுடைய தம்பிகளான கராதிகள் ராமனால் கொல்லப்பட்டார்கள். ஒருவருமில்லாமல் அழித்து விட்டான். ஆகையால் அவனுடைய மனைவியைத் திருடிக்கொண்டு வரும் காரியத்தில் எனக்கு உபகாரம் செய்ய வேண்டும்" என்று கேட்டான்.

மாரீசன் "ராவண! முதலில் ஸீதையைப் பற்றிச் சொன்னவன் யார்? மேலும் அவளை அபஹரித்துவர யோசனை சொன்னவன் யார்? அவ்விருவரையும் எனக்குச் சொல். உனக்கு நன்மையைச் சொல்லுவதுபோல, உன்குலத்திற்கும், உனக்கும் அழிவு வழியைக் காட்டியுள்ளான் யார் அவன்?" என்று கூறி, மேலும் செப்புகின்றான்.

(தொடரும்)

ஓர் நற்செய்தி

திருமலை - திருப்பதி தேவஸ்தான மாத வெளியீட்டில் பிரசுரிபபதற்கு, ஹிந்துசமய சம்பந்த கோயில்கள், வியாபார மற்றும் வேறு ஸ்தாபனஙகளிருந்து கீழ்ககணட கட்டணத் தொகைப்படி விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கட்டணத் தொகை ஒவ்வொரு தொகுப்பிற்கும்

உறையின பின் பககம்:

ஒரு வர்ணம்	ரூ. 200/-
இரணடு வர்ணங்கள்	ரூ. 250/-
மூன்று வர்ணங்கள்	ரூ. 300/-

உறையின உட்பக்கங்கள் (முன் அல்லது பின்):

ஒரு வர்ணம்	ரூ. 150/-
இரண்டு வர்ணங்கள்	ரூ. 200/-
மூன்று வர்ணங்கள்	ரூ. 250/-

சிறந்த இடங்கள் (முகபபார்வை):

முன் பக்கம்	ரூ. 125/-
கடைசி பக்கம்	ரூ. 110/-
செய்திக்கு எதிரில்;	
முழுப் பக்கம்	ரூ. 100/-
அரை பக்கம்	ரூ. 60/-

சாதாரண விளமபரம:

முழுப் பக்கம்	ரூ. 80/-
அரைப் பக்கம	ரூ. 50/-
கால் பக்கம்	ரூ. 30/-

அச்சுக் குறிப்பு:

ஸ்கீரின் உறை பக்கம்	80 to 100
ஸ்கீரின் உள் பக்கம்	65 to 80

பிளாக்குகள்;

முழுப் பக்கம்	6" × 8"
அரைப் பக்கம்	6" × 4" or 3" × 8"
கால் பக்கம்	6" × 2" or 3" × 4"

வெளியீடு விஷயங்கள், பிளாக்குகள் அனுப்பும் குறிப்பு

1. விளம்பரத்திற்கு அனுப்பும் நபர்கள் உறை ஏடுகள் தவிர, மற்றவைகளுக்கு 6 மாத வெளியீடுகள் வரை ஒப்பந்தம் செய்து கொணடால் 10 சதவீதமும், 12 மாத வெளியீடுகள் வரை ஒப்பந்தம் செய்து கொண்டால் 15 சதவீதமும், மேற்கண்டத் தொகையில் தள்ளுபடி செய்யப்படும். இருப்பினும் கொடுக்கப்படும் அளவுகள், கட்டணங் கள் குறித்து தேவஸ்தான பத்திரிகை ஆசிரியரின் (Editor) தீர்மானமே முடிவாகும.

2. எந்த விதமான அறிவிப்பு இல்லாமல் விஷயங்களை ஏற்காமல் இருக்க மாத வெளியீடு ஆசிரியருக்கு உரிமை உண்டு.

ஆசிரியர்.

திருமலை - திருப்பதி தேவஸ்தானம்.

இந்து சமயக் கையேடு

திரு அ நடராஜன், திருப்பதி.

★ ★ ★

(முன் இதழ்த் தொடர்ச்சி)

தூய அல்லது இறுதியான பிரம்மம் என்பதும் விஷ்ணு, நாராயணன், வாசுதேவன் அல்லது வேங்கடேஸ்வரா எனப்படுவதும் ஒன்றேயாகும் என்று விசிஷ்டாத்துவைதம் கூறுகிறது மனித குலத்தை மீட்கும் பொருட்டு மிக முக்கியமான அல்லது வரலாற்றுச் சிறப்பு மிக்க சந்தர்ப்பங்களில் கடவுள் வெவ்வேறு வடிவங்களில் அவதரிக்கின்றார். பக்தர்களின் அல்லது அடியார்களின் வேண்டுகோளுக்கிணங்கி எல்லையில்லாத அன்பு காரணமாக அவர் அர்ச்சை வடிவங்களில் அல்லது விக்கிரக வடிவங்களில் நிரந்தரமாக அவதாரம் எடுக்கின்றார். எனவே, விசிஷ்டாத்துவைதக் கொள்கையின்படி, வாசுதேவன் அல்லது விஷ்ணு என்பவரே திருமலையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்றார். கலியுகத்தில் தவறு செய்யும் மாந்தர்கள்பால் உள்ள எல்லையற்ற பேரன்பினால், முடிவில்லாத பரமபொருள் திருமலையில் நிரந்தரமாக அவதாரம் செய்திருக்கின்றார், நிலையற்ற மனிதன் அவரது அருளுக்குத் தன்னை முழுவதும் ஒப்படைத்துக் கொள்வதனால் அழிவற்ற அமரனாகின்றான் ஆகவே, திருப்பதியானது கலியுக வைகுண்டமே என்னும் கூற்றானது சற்றும் மிகையேயாகாது. ஜீவனுக்கும் ஈசுவரனுக்குமுள்ள தொடர்பு, உடலுக்கும் (சரீரத்திற்கும்) உடலையுடைய ஆன்மாவிற்கும் (சரீரிக்கும்) இருக்கும் தொடர்பைப் போன்றதேயாகும் எனவே, ஈசுவரன் இவ்வுலகிலுள்ள ஒவ்வொன்றினுடைய அக ஆன்மாவாக அல்லது உள்ளான்மாவாக இருக்கின்றார், ஒவ்வொரு பெயரும் உருவமும் இறுதியில ஆன்மாக்களுக்கெல்லாம் பேரான்மாவாக விளங்கும் ஸ்ரீநிவாஸனுக்கே அல்லது பிரம்மத்திற்கே உரியதாகும்.

துவைத சித்தாந்தத்தின்படி, ஜீவன் (சித்து), உலகு (அசித்து), கடவுள் (ஈசுவரன்) ஆகியவை வெவ்வேறான தத்துவங்களாகும். கடவுள் உலகின் சாதாரண காரணமாக மட்டுமே ஆகின்றார். விஷ்ணுவே அவர். நற்குணங்கள் அனைத்தும் கொண்டவர் அவர், ஞானம் (அறிவு), ஆனந்தம் (களிப்பு) முதலியவற்றாலான எழில்மேனி உடையவர் ஆவார். ஜீவன்களும் உலகும் அவரைச் சார்ந்திருப்பவை. அளவில் மிக மிகச் சிறியனவாயிருக்கும் ஜீவன்கள் ஒன்றிலிருந்து ஒன்று வேறானவை. அவை தத்தம் குணங்களுக்கேற்ப தமோயோக்யர்கள், நித்ய சம்சாரிகள், முக்தியோக்யர்கள் என்று மூவகைப்படும். முதல்வகை ஜீவன்கள் எப்போதும் நரகத்தில் உழலுகின்றன. மூன்றாவது வகை ஜீவன்கள் என்றைக்கும் சுதந்திரமாயிருந்து கொண்டு விஷ்ணுலோகத்தில் வசிக்கின்றன இரண்டாவது வகையைச் சேர்ந்த ஜீவன்கள் செய்கைகளின் பலன்களைத் துறப்பது என்பதிலிருந்து விஷ்ணுவின் தியானம் என்பது வரை உள்ள பயிற்சிகளினால் கடவுளை நேரடியாக உணர்ந்தறிந்து, அவற்றின் இயல்பிற்கேற்ப முக்தர்களுக்குரிய (அதாவது, விடுதலை பெற்றவர்களுக்குரிய) இன்பங்களைத் துய்க்கின்றன. வெறுப்பு முதலிய வாசனைகள் அல்லது பற்றுக்கள் இல்லாமலிருந்தால் அவை முக்தி அல்லது விடுதலை பெற்று, மிக உயரிய இன்பத்தை

நுகர்கின்றன. கடவுளுக்கும ஜீவனுககு முள்ள உறவு ஆணடைக்கும் அடிமைககு முளள உறவைப் போனறதாகும எனவே, இக்கோட்பாட்டினபடி, வாழ்வின பெரு நலம் என்னவென்ருல், இமமையிலும மறு மையிலும் இறைவனுக்குத் தொணடு புரிவதேயாகும்.

பாசுபதக் கொள்கையின்படி, கடவுள் (பதி), ஜீவன் (பசு), இயறகை (பாசம) என்று மூன்று நிரந்தரமான தத்துவங்கள உள்ளன கடவுள்தாம் மிக உயரிய பதி அல்லது பரமேசுவரன். அவரே உலகின் சாதன காரணம், அதாவது, அதை ஆககும் காரணம் ஆவார; அணுக்கள் பொருட் காரணமாக இருக்கின்றன. ஜீவன் ஈசுவர னிடமிருந்தும் பொருளிலிருந்தும் வேருனது. ஆனல், தனனுணர்வுடையது. எதனெத னுடன் சம்பந்தம் உண்டாகின்றதோ அதன தன் வடிவத்தை ஏற்கும் பளிங்கைப் போன் றது அது. ஆணவம், மாயை, காமியம் (அறியாமை, சடத்துவம், ஆசை) என்ப வற்ருலான பாசத்தில் சிக்கிக் கொள்ளும் போது, அது பாசம் என்னும் சம்சாரத்தை அநுபவிக்கிறது. ஜீவன் பதியுடன் தொடர்பு கொள்ளும் போது பதியைப்போல ஆகின் றது. தனது அறியாமை முதலியவற்றை அகற்றும் குறிப்பிட்ட சில பயிற்சிகளைக் கடைப் பிடிப்பதால் ஜீவனுனது முக்தி அல்லது விடுதலை பெறுகிறது. இக்கொள் கையின்படி, முக்தி எனப்படுவது சிவசாரூப் யம், அதாவது, சிவனை யொத்த உருவத்தை அடைதலே அல்லாது, சிவ — ஐக்கியம், அதாவது, சிவனுடன் ஒன்றியிணைதல் அன்று: அன்பே சிவன்: தமது அருளிஞல் ஜீவனிட மிருந்து அதன் மலங்களை அல்லது அழுக்கு களை அவர் நீக்குகிருர் ஞானத்தின் மிக உயரிய நிலை யாதெனின், சிவனுக்கும் சிவனடியார்களுக்கும் தொண்டாற்றுவதே யாகும்.

சைவம், சாக்தம இரண்டும் பாசு பதத்தில் சேர்ந்தவையேயாகும். சாக்த மதத்தில், சணடி என்றழைககப் பெறும் சக்தி அல்லது தேவியே உயர்வான தெய்வம். காளி, லட்சுமி, சரஸவதி என்னும் மூன்று வடிவங்களில் அவளை வழிபடுகின்றனர். சக்தி யின் அன்பு காரணமாக உலகம் சிவனிட மிருந்து தோன்றி, அவரிடமே ஒடுங்கி விடு கிறது ஞானத்திஞலும் பக்தியிஞலும் ஜீவன் விடுதலையடைந்து சிவனுடன் ஒன்றி விடுகிறது. சாக்தர்களில் சில பிரிவினர், கள்குடத்தில் கடவுளை வழிபடுவது, சுடலை யின் சாம்பலைப் பூசிக்கொள்வது போன்ற, வேதத்திற்குப் புறம்பான ஆசாரங்களைப் பின்பற்றுகின்றனர்.

இடைக்காலத்திய சித்தாந்தங்கள்: விசிஷ் டாத்துவைதம், பக்தியையும் பிரபத்தி அல்லது சரணுகதி என்பதனையும் கொள்கை களாகக் கொண்டிருந்ததோடு கூட, பக்தி செய்வோர், பிரபத்தி செய்வோர் அனை வரும் எந்த ஜாதியைச் சேர்ந்தவராயிருந் தாலும் சரி, ஆணுகவோ பெண்ணுகவோ இருந்தாலும் சரி, அவர்கள் சரி சமானமான வர்களே என்னும் கருத்திற்கும் முக்கியத்து வம் அளித்ததால், அது எல்லா மக்களின் மனத்தையும் கவர்ந்தது; எனவே, விரைவில் நாடு முழுவதும் பரவியது பக்திமான்கள் பலர் வடஇநதியாவில் இச்சித்தாந்தைப் பரப்புவதற்கு முன் வந்தனர். ஆனுல், அவர்களின் போதனைகள் அவரவர்களது மனப்பாங்கின் தனமைக்கேற்ப அமைந்திருந் தன. பிரம்மம் (அல்லது, பரமாத்மா) என்பதும், நாராயணன் (அலலது, விஷ்ணு) என்பதும ஒன்றே என்னும் கருத்தினைக் கொண்ட விசிஷ்டாத்துவைதத்தின் போக்கு இம்மெய்யடியார்களின் உள்ளத்தை ஈர்த்த தனுல், தம்தம் மனத்திற்குகந்த நாராயண னின் சிறப்பு உருவங்களில் மட்டும் கடவுள்

இருப்பதாகக் கொண்டனர் இவர்கள் எந்த உருவத்தில் கடவுளை வழிபட்டாலும், அந்த உருவத்திலேயே அவர் தோன்றி, பக்தியை ஏற்றுக் கொள்கிறார்.

இத்தகைய போதகர்களுள் முதன்மையானவர் ராமானந்தர். 'ஈசுவரன் ஒவ்வொரு ஜீவனினுள்ளும் வசிக்கிறார், நேர்மை நிறைந்த ராமனே அவர்' என்பது அவரது கொள்கை. முஸ்லிம்கள் கூட ராமானந்தரின் சீடர்களாயினர் என்பதிலிருந்து அவரது பெருமையின் தனிச்சிறப்பு வாசிக்கும் அவருடைய போதனைகளுக்கு மிகுந்த வலுவை நாம் மதிப்பிட்டுக் கொள்ள முடியும் அவருடைய போதனைகளை கபீர் பின்பற்றி, இஸ்லாமிய மதத்துடன் தக்கமுறையில் இணைத்து 'கபீர்பந்த்' அல்லது 'கபீர்வழி' என்பதனை நிறுவினார்.

ஸ்ரீ கிருஷ்ணனே பிரம்மம் என்று போதித்தவர் வல்லபர் அவரது கொள்கையின்படி கடவுளின் வடிவம் ஆன்மிகக் காதலினாலான ராதாகிருஷ்ண உருவமாகும். கடவுள் ஜீவன்களுடன் கோகுலத்தில் விளையாடுகின்றார். படைப்பு என்பது கிருஷ்ணனின் லீலை அல்லது திருவிளையாடல் ஆகும். கிருஷ்ணனை அடைவதற்கான ஒரே சாதனம் பக்திதான். புஷ்டி அல்லது அடக்க முடியாத காதல் என்பதே பக்தி. உடலிலிருந்து விடுதலையடைந்தவுடன் பக்தன் வைகுண்டத்திற்கும் அப்பாலுள்ள கோகுலத்திற்குச் சென்று, கிருஷ்ணனோடு ஒன்றி விடுவதனால உண்டாகும் பேரானந்தத்தை அனுபவிக்கிறான்.

ராதாகிருஷ்ண வழிபாட்டுக் கொள்கையினைப் போதித்தவர் சைதன்யர். தூய அல்லது இறுதி மெய்ப்பொருளான பிரம்மம் எனப்படுவது, தமது அன்பு நிறைந்த 'மறுபாதி' ஆகிய ராதாவுடன் விளையாடும் ஸ்ரீகிருஷ்ணனே ஆகும் கிறங்கவைக்கும் மோகன எழில் வடிவம் அவருடையது. அவர் தமது மயக்கும் பேரழகினால் ஜீவன்களைத் தம்மிடம் ஈர்க்கின்றார். பக்தி அல்லது பிரேமையே கிருஷ்ண இன்பத்தை அடைவதற்கான ஒரே வழியாகும் கிருஷ்ணனின் பால் காட்டும் அன்பில், பலவேறு மனப்பாங்குகளை-கடவுளை சமமானவனாகவும், தோழனாகவும், இன்னும் பலவாறாகவும் அணுகி வழிபடும் முறைகளை — சைதன்யர் எடுத்துக் கூறினார். இவற்றுள் கிருஷ்ணனை ஆன்மிகக் காதற்கணவனாகக் கருதுதல் மிகச் சிறந்ததாகும். கிருஷ்ணனின் காதல் அல்லது அன்பு என்பது வைகுண்டத்தின் இன்பங்களையும் விஞ்சியதாகும்.

நவீன சமய இயக்கங்கள். பிரம்ம சமாஜம், ஆர்ய சமாஜம், ராமகிருஷ்ண இயக்கம் ஆகியவை அந்நிய சமயங்களின் மதமாற்ற அலுவல்களுக்கு எதிராகத் தோன்றிய வலுவான இயக்கங்களாகும் அவை, இன்றைய காலத்தின் தேவைகளுக்கேற்ற கருத்துக்களின் அவசியம் காரணமாகத் தோன்றிய இயக்கங்களாகும்.

(தொடரும்)



சந்தாதாரர்களுக்கு ஓர் விண்ணப்பம்

* * *

ஸப்தகிரி மாத இதழ் ஆண்டு சந்தா ரூ. 5/—

கீழ்க்காணும சநதாதாரர்களின் சநதாககாலம புதியகணக்கினபடி 30-4-74 ல முடிவடைவ தினல், அவாகள இநத விஷயத்தைக கவனித்து கீழ்ககாணுமபடி தஙகளுடைய தொகையை எங்களுக்கு மணியார்டா மூலமாக அனுப்புமபடி கேட்டுககொள்கிறோம். மணியார்டா கூப்பனில கீழ்ககணட எணகள கொணட சந்தாதாராகள முழு விலாசததுடன் விரைவாக தஙகளுடைய சநதாககளை செலுததாவிடில், அவர்களுக்கு மாத இதழ் அனுப்பமுடியாது

T 35	T 81	T 234	T 296	T 451	T 759	T 875
T 37	T 111	T 236	T 378	T 476	T 760	T 944
T 66	T 163	T 239	T 396	T 492	T 761	
T 67	T 168	T 240	T 397	T 538	T 762	
T 74	T 171	T 254	T 399	T 541	T 763	
T 75	T 179	T 292	T 401	T 542	T 767	
T 77	T 187	T 293	T 424	T 568		

மாத இதழுக்குச சம்பநதப்பட்ட பணத்தை, மணியாாடர் மூலமாக, '' ஆசிரியர், தி. தி. தேவஸ்தானம், திருப்பதி. (A. P)'' *என்ற முகவரிக்கு அனுப்பவேணடும். செக் மூலமாகவோ, அலலது தவறுதலான முகவரிக்கோ அனுப்பும்படியான பணத்தைப் பற்றிய விபரஙகளுக்கு அலுவலகம் எந்த விதமான பொறுப்பும் ஏற்காது என்று இதனல் அறிவிக்கப்படுகிறது.*

ஆசிரியர்.



கவனிக்கவும்

மணியார்டர் கூப்பனில் (Money Orders) சந்தாத்தொகை அனுப்புமபோது, சநதா எண்ணைக் குறித்து அனுபபவும். சந்தாதாரர்கள் தங்களுடைய புதிய எண்ணை ஸப்தகிரி மாத வெளியீடு உறையில (Cover) கவனிக்கவும்.

ஆசிரியா:

சிறப்புச் செய்தி

திருக்குறள் கருத்தரங்கு

திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறையினர் சார்பில் 6-2-74 லிருந்து 8-2-74 வரை அதாவது மூன்று நாட்கள் திருக்குறள் கருத்தரங்கு ஒன்று நடை பெற்றது.

கருத்தரங்கு விழா 6-2-74 அன்று பல்கலைக் கழகப்பொது நிர்வாக அரங்கில் தமிழ்த் தாய் வாழ்த்துடன் இனிது துவங்கியது.

திருப்பதி, திருவேங்கடவன் இசை, நாட்டியக் கல்லூரியைச் சார்ந்த இசைத்துறையின் தலைவரான திரு எஸ். ஆர் ஜானகி ராமன் அவர்கள் திருக்குறள் பாடி இறை வணக்கம் செய்ய விழா துவங்கியது.

திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவரான டாக்டர் திரு. சுப்பு ரெட்டியார் அவர்கள், விழாவிற்கு வருகை புரிந்த கூட்டத்தினரை வரவேற்றுப் பேசிய போது, திராவிட மொழிக்குத் தமிழ் தாய்மொழி என்று கூறி, குறளின் பெருமையையும், அம்மொழியில் அமைந்த திருக்குறளின் சிறப்பையும் விளக்கினர். மேலும் இக்கருத்தரங்கு நன்கு நடைபெறுவதற்கு உதவிய திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் அவர்களுக்கும், செயலர் அவர்களுக்கும், மற்றைய துறையினர்களுக்கும் தம் நன்றியை, தமிழ்த்துறை சார்பில் தெரிவித்துக் கொண்டார்.

பின்னர் திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த வழக்கறிஞர் திரு பி. ரெங்கசாமி ரெட்டியார் அவர்கள் திருவள்ளுவர் உருவப் படத்தைத் திறந்து வைத்தார். அவர் தன் உரையில் திருக்குறளின் பெருமையைக் கூறி, வள்ளுவர் அறம், பொருள், இன்பத்தை மட்டுமே கூறி, வீட்டைப்பற்றிக் கூறாததற்குக் காரணம் கூறி, அறம் பொருள் இன்பமே வீட்டிற்கு அதாவது பேரின்பத்திற்கு வழிகாட்டி என்றும் கூறினர். மேலும் திருக்குறள் கருத்துக்கள் எவ்வாறு இன்றைய அரசியல், பொருளாதாரச் சிக்கலுக்கு மருந்தாக இருக்கின்றன என்றும் அவர் விளக்கித் தன் உரையை முடித்துக் கொண்டார்.

அதற்குப் பிறகு பேசிய திருவேங்கடவன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர். திரு. ஜகன்னாத ரெட்டி அவர்கள், தன் தலைமையுரையில், முதலில் சென்னை பல்கலைக் கழகத் துணை வேந்தர் தாமரைத்திரு. என். டி. சுந்தரவடிவேலு அவர்களைக் கூட்டத்தினருக்கு அறிமுகப்படுத்தி, திருக்குறள் கருத்துக்களும், ஆந்திர நாட்டுத் தத்துவ ஞானியான வேமனரின் கருத்துக்களும் எவ்வாறு ஒன்றியிருக்கின்றன என்பதைப் பற்றிப் பேசினர். திருவள்ளுவர் ஒரு 'சமூகச் சீர்த் திருத்தவாதி' என்றும் 'சிந்தனை சிற்பி' என்றும் கூறினர். திருவள்ளுவரிடம் அமைந்த சமய, கல்வி, அரசியல் அறிவு மேம்பாட்டை விளக்கிப் பேசினர். திருக்குறளைப் பல உள்நாட்டு, அயல்நாட்டு மொழிகளில் மொழி பெயர்த்ததிலிருந்தே திருக்குறளின் பெருமையை நாம் நன்கு அறிய முடியும் என்று கூறினர். திருவேங்கடவன் பல்கலைக் கழகப் பொது நிர்வாக அரங்கை இனி வள்ளுவர் உருவப்படம் அலங்கரிக்கும் என்று குறிப்பிட்டதைக் கேட்டு, அவையினர் பெரிதும் மகிழ்ந்தனர்.

பிறகு தன்னுடைய தொடக்க விழா பேருரையில், சென்னை பல்கலைக்கழகத் துணை வேந்தர் தாமரைத்திரு. என். டி. சுநதர வடிவேலு அவாகள், தமிழ்நாட்டிற்கும் ஆந்திர நாட்டிற்கும் இருநத, இருக்கினற பணபாட்டு ஒற்றுமையையும், மொழி ஒறறு மையையும் பறறிப் பேசினா திருக்குறள் ஒரு தனிப்பட்ட சமூகததினர்க்கோ, ஜாதியினர்க்கோ, நாட்டினர்க்கோ உரிமையல்ல என்றும், அது ஒரு உலகப் பொதுமறை என்றும் கூறினா. இல்லற இயயில் ஒழுகி எழுதிய திருவள்ளுவரின கருத்துக்களுக்கும், இல்லறத்தில் இருநது துறவறத்தை மேற் கொண்ட வேமன்னவின் கருத்துக்களுககும் இருககின்ற ஒப்புமையை எடுத்துக் கூறினர். காந்தியின் சொல்லாமை தத்துவம், வாய்மையின் மேம்பாடு ஆகியவைகளின பெருமைகளைக் குறிக்கும் குறட் கருத்துககளைச் சுட்டிக் காட்டிப் பேசினர் வள்ளுவர் ஓர் 'தத்துவ ஞானி' என்று கூறி. இன்றைய நாட்டிற்கு தேவையான பொருளாதார, அரசியல் மேம்பாட்டிற்குக் குறட் கருத்துக்கள் இன்றியமையாதன என்றும் விளக்கினர்.

பிறகு பேசிய திரு. வேங்கடசாமி ரெட்டியார் அவர்கள், ஆறு சமயங்களில் கூறப்பட்டுள்ள அனைத்துக் கருத்துக்களும் திருக்குறளில் ஒருங்கே அமைந்திருப்பதால்தான் திருக்குறளை சமய வேறுபாடின்றி அணுக முடிகின்றது என்று கூறினர். குறளில் படிந்த சில சொற்களின் ஆழ்நத கருத்தை அவையினர்க்கு பல எடுத்துக் காட்டுக்களுடன் விளக்கினர். 'திருமால் ஞாலத்தை அளந்தார். ஆனல் வள்ளுவனே அஞ் ஞாலத்தில் உள்ள எல்லாவற்றையும் அளந்தான்' என்று கூறினர்.

குறளின் பெருமையைப்பற்றி ஆங்கிலத்தில் பேசிய டாக்டர். கமலநாதன் அவர்கள் அரிஸ்டாடிலும கூருத பல கருததுக்கள் குறளில் உள்ளது என்று கூறி, குறள் ஒரு 'புதுமைப் பெட்டகம' என்று வர்ணித்தாா. நவீன ஜனநாயகத்திற்கு வேணடிய பல கருத்துக்களைககுறள தன்னிடததேகொண்டுள்ளது எனறி கூறி, மனிதனுககு வேணடிய எளிமை இரக்கம், நாணயம் ஆகியவற்றைப பறறி குறள் விளககுகின்றது என்றும் கூறினா கடைசியில கருத்தரஙகு வாழ்த்து கூறி உரையாறறிய தவததிரு குன்றக்குடி அடிகளாா அவாகள் ''சாலைகள் உடல்களை இணைககின்றன. நன்னெறிகள் மனிதனை இணைக்கின்றன. அத்தகு சமுதாய சீர்த்திருதத நெறிகளை கொணடது'' குறள் எனறு கூறினர் மேலும குறட்செயயுள எல்லா வற்றிறகும் உரையாசிரியாகளின் கருத்தையே பின்பற்றாது, வளளுவர் நெஞ்சம எதை நினைத்தது என்பதை, தன் அறிவுடனே உணர்ந்தறியவேண்டுமென்று கூறி, பல குறட்பாக்களுக்குப் புதுமையான ஆனல் ஏற்ககக்கூடியகருததுக்களை எடுத்துக்கூறினர். திருக்குறள் ஒரு ''வான காட்டும் விளக்கு'' என்றும், வள்ளுவர் ஓர் ''ஒருமைப்பாட்டு கவிஞர்'' என்றும் கூறி, ஒவ்வொரு தமிழனும் திருக்குறளைத் தன் வாழ்வியலாகக் கொண்டால்தான் அது வள்ளுவர்க்குப் பெருமை எனறு கூறினர். காால் மார்க்ஸை விடவள்ளுவா பலகருத்துககளைத் தன் பாடல்களில அள்ளித் தெளித்துளளாா என்று கூறி காரல்மார்க்ஸுக்கு எப்படி லெனின என்ற ஒரு சிறந்த மாணவன் தேவைப்பட்டானே, அதுபோல் வள்ளுவர்க்குப் பல மாணவர்கள் தேவை என்று கூறி, கருததரங்கு நல்முறையில் வெற்றி பெற வாழ்த்தியருளினர்கள்.

விழாவிற்கு திரு என். கடிகாசலம் நன்றி கூறினர்.

அன்றுமாலை நடந்த நிகழ்ச்சிகளின விவரமும், அடுத்த இரண்டு நாட்களில் நடை

பெறற நிகழச்சிகளின் விவரமும் பின் வருமாறு:

தேதி. 6-2-74 நேரம: 14-00 மணி

தலைவர்·

பேராசிரியா, திரு எம் சுநதரம்,
அரசினர்ககலலூரி, சென்னை.

1. திருககுறளும் வேளாணமையும்:
திரு. எம் ஷணமுகம்பிளளை

2. திருககுறளும கலவியும.
டாகடர். என். சுப்புரெடடியாா,
தமிழ்த்துறைத் தலைவர்,
திருவேங்கடவன் பல்கலைககழகம்.

3. திருக்குறளும் அரசியலும·
டாகடர். கே. கமலநாதன,
அரசியல் துறைத்தலைவர்
திருவேஙகடவன் பலகலைக கழகம.

4. திருககுறளும பெண்மையும்:
பேராசிரியை பி பி இராஜராஜேஸ்வரி
முதல்வா அரசினர் மகளிாக் கலலூரி,
நாமக்கல்.

தலைவா: திரு. பி. ரெங்கசாமி ரெட்டியார்

1. திருககுறளும பகவத் விஷயமும (தமிழ).
திரு கே. வெங்கடசாமி ரெட்டியாா

2 திருககுறளும வேமனுவும (தெலுஙகு).
திரு. எம். சதாசிவரெட்டி,
தெலுங்கு விரிவுரையாளர்,
திருவேங்கடவன் கலைககலலூரி,
திருப்பதி.

நனறியுரை· திரு. டி. தேவசங்கீதம்.

'தமிழ் இலக்கியஙகளில திருககுறள'

தேதி· 7-2-74 நேரம காலை 09-00 மணி

தலைவர்: பேராசிரியர் திரு. வா. சுப மாணிக்கம, தமிழத்துறைததலைவர், அணணுமலைப் பல்கலைககழகம்

1. சஙக இலக்கியததில:
பேராசிரியர். வா. சுப மாணிக்கம்

2. சிலபபதிகாரத்தில:
திரு. எஸ. செல்லப்பன்,
சிறப்பு அலுவலர்
தமிழ் வளாச்சிக் கழகம,
தமிழ்நாடு அரசு.

3. கமபராமாயாணததில:
டாக்டர் கு. தாமோதரன்
தமிழப பேராசிரியர்
திருவேஙகடவன பலகலைககழகம்

4. பாரதியாா பாடலகளில
திரு. டி ஜே. இரகுபதி
தமிழ விரிவுரையாளா,
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்

நனறியுரை (கவிதையில):
திரு. டி. மோஹன ரங்கசாமி
மாணவா, செயலாளா.

திருககுறளும சமயமும்
நேரம மாலை 14-30 மணி

தலைவா: பேராசிரியர் என். சஞ்சீவி,
தமிழத்துறைத்தலைவர்,
சென்னை பல்கலைக்கழகம்

1. சைவம்: பேராசிரியர். என். சஞ்சீவி

2. வைணவம; திரு கே. வெங்கடசாமி ரெட்டியாா

3. இஸலாம
பேராசிரியர். எஸ. அப்துல ரஹ்மான்
தமிழ்ததுறைத் தலைவர்
இஸ்லாமியா கல்லூரி,
வாணியம்பாடி.

4. கிறித்துவம
பேராசிரியா திரு: ராஜமாணிககம்,
தமிழததுறைத தலைவா,
இலயோலாக் கல்லூரி, சென்னை.

நனறியுரை: திரு. பொன். சௌரிராஜன்,
தமிழ் விரிவுரையாளா.

மாலை 19-00 மணி

நடைமுறையில திருககுறள.
பேராசிரியர். எம. சுநதரம்

நனறியுரை ஜி ஜியாராஜ்ஸடீFன

தேதி 8-2-74 நேரம: காலை 10 மணி

திருககுறளும மறறய இலககியஙகளும

தலைவர்· பேராசிரியர் எம். வி. ராமசாமா முதல்வா, திருவேஙகடவன பலகலைக கழகக கலலூரி, திருப்பதி.

1. தெலுஙகு:
பேராசிரியர் ஜி. என். ரெட்டி
தெலுங்குத் துறைத்தலைவா,
திருவேங்கடவன் பல்கலைக கழகம்.

2. மலையாளம:
பேராசிரியா இ ஆர் கிருஷ்ணாமா,
வடமொழித துறைத்தலைவா
திருவேங்கடவன் பல்கலைக் கழகம்

3. இநதி.
பேராசிரியர் எஸ சங்காராஜு நாயுடு,
இநதித் துறைததலைவா,
சென்னை பல்கலைககழகம்.

4 வடமொழி
டாக்டர் டி வரதாசசாரி
வடமொழி பேராசிரியா,
திருவேங்கடவன் பலகலைக்சழகம்

5. ஆஙகிலம்:
திரு. எஸ். விஸ்வநாதன்,
ஆங்கில விரிவுரையாளர்,
திருவேங்கடவன பல்கலைககழக கலலூரி
திருப்பதி.

நனறியுரை· டாகடர் கு. தாமோதரன்
தமிழ்ப் பேராசிரியா.

இவ்வாறு இத்திருக்குறள் கருத்தரங்கு மொழி; சமய, இலக்கிய ஒருமைப்பாட்டிற்குப் பெரும்செயல் புரிநதது எனறு கூறலாம்

"கற்றில ரெயினும் கேடக அஃதொருவறகு
ஒறகததின ஊற்றுந துணை"



எச்சரிக்கை

செபபுக காசுகள, பிரதிமைகள், வாங்கினல்தான திருமலைக்கு பல வசதி ஏறபடும என்று உஙகளை ஏமாறறுவதற்குப் பண்டாக்கள காத்துக கொண்டிருககிறார்கள. இவற்றை நமபவேண்டாம் என்று யாத்திரிகர்கள இதன மூலம எச்சரிக்கை படுத்தப்படுகிறார்கள்.

சுத்தமான பிரார்த்தனைச் சாமானகள, படங்கள, புததகஙகள, திருமலை, திருபபதியில உளள தேவஸதான சததிரங்களிலும், புத்தகாலயங்களிலும் கிடைக்கின்றன.

EDITED AND PUBLISHED ON BEHALF OF THE T. T. DEVASTHANAMS BY K. SUBBA RAO, M A AND PRINTED AT T T D PRESS BY M VIJAYAKUMAR REDDY, MANAGER, T T D PRESS, TIRUPATI